# கலைமாமணி டி. ஏ. தனபாண்டியன்

''கர்த்தாவே, நான் உமக்குப் புதுப்பாட்டைப் பாடுவேன். தம்புரினாலும், பத்து நரம்பு வீணையினாலும் உம்மைக் கீர்த்தனம் பண்ணுவேன்''

சங்கீதம் 144 : 9.

இவர் இசைப் பேரறிஞர் ஆபிரகாம் பண்டிதரின் வழித்தோன்றல்; இசைக் கதைச் செல்வர்; இன்னிசைச் செம்மல்; இறையன்பர்; அருட் கலைஞர். கருத்தாழ மிக்க பழம் பெரும் கீர்த்தனைகளுக்குப் புது இசையேற்றி, கதா காலட்சேபம், இசைச்சித்திரம், இசை நிகழ்ச்சிகள் முதலியவற்றால் இறைவன் இயேசுவின் திருப்புகழ் பாடிய இசைவாணர்!

**இளமையில் சங்கீதம்**

1921ஆம் ஆண்டு, அக்டோபர் திங்கள், 24ஆம் நாள், திரு.துரைபாண்டியன், திருமதி.மரகதவல்லி துரைப்பாண்டியன் அவர்களின் அருத்தவப் புதல்வனாக, தூத்துக்குடியை அடுத்த சேர்வை காரன்மடம் எனும் சிற்றூரில் து.ஆபிரகாம் தனபாண்டியன் பிறந்தார். ராஜா பெரியநாயகம், ஞானசெல்வம் என்போர் இவரது உடன் பிறப்புகள் ஆவர். இசைக்குடும்பத்தில் பிறந்த இவர், இளமையிலேயே தமது தாயாரிடம் (ஆபிரகாம் பண்டிதரின் புதல்வி) முறைப்படி கர்நாடக சங்கீதம் பயின்றார். பின்னர் அகில இந்திய வானொலி நிலைய வித்துவான்களான திரு.நடராஜபிள்ளை, திரு.மரியானந்தம் என்பவர்களிடம் முறைப்படி பயின்று, புல்லாங்குழலிலும் தேர்ச்சிப் பெற்றார். இவரது இல்லத்தைச் சூழ்ந்த மாந்தோப்பில், புல்லாங்குழல் இசையும், இனிய குரலில் கர்நாடக இசையும் தொனித்துக் கொண்டேயிருக்கும்!